ஓசூர் – தளி சாலையில் ரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டும்! கர்நாடகா எல்லையில் இருந்து

# ஓசூர் வழியாக சூளகிரிக்கு மெட்ரோ ரயில் திட்டம் கொண்டு வாரீர்!

## சட்டப்பேரவையில் – ஒய்.பிரகாஷ் பேச்சு!

**சென்னை, ஏப்.13-**

**சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய ஓசூர் தொகுதி கழக எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் "ஓசூர் - தளி சாலையில் ரயில்வே மேம்பாலம் கட்டப்பட வேண்டும்" என்றும் -"கர்நாடகா எல்லையில் இருந்து ஓசூர் வழியாக சூளகிரிக்கு மெட்ரோ ரயில் திட்டம் கொண்டு வர வேண்டும்!" என்றும் கோரிக்கை விடுத்தார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நூற்றாண்டு நிறைவு விழா காணும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஓய்வெடுக்கும் திசை நோக்கி வணங்கி எனது உரையை ஆரம்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மாமன்றத்தில் 2025-2026 ஆம் ஆண்டுக்கான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில் பேச எனக்கு வாய்ப்பினை வழங்கிய நல்லாட்சி நாயகர், முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர், திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் வருங்கால நம்பிக்கை நட்சத்திரம், மாநில இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அண்ணன் உதயநிதி அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட பொறுப்பு அமைச்சர் அண்ணன் அர. சக்கரபாணி அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு அதற்கு மேலாக, ஓசூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2025-2026 ஆம் நிதிநிலை அறிக்கையில் ஓசூரில் 5 இலட்சம் சதுரடி பரப்பளவில் உயர்தர அலுவலக வசதிகளுடன் ரூ.400 கோடி மதிப்பீட்டில் TIDEL தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் ஓசூர் மாநகரத்தை ஒட்டி உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஓசூர் அறிவுசார் பெருவழித்தடம் (Hosur Knowledge Corridor) வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக, நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், எனது ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கெளவரப்பள்ளி அணை பகுதியில் ஆவலப்பள்ளி மற்றும் தட்டிகானப்பள்ளி கிராமங்களை இணைக்கும் வகையில் பெண்ணையாற்றின் குறுக்கே கெளவரப்பள்ளி அணையின் கீழ்புறத்தில் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.9 கோடியே 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு மற்றும் கெளவரப்பள்ளி அணையின் இடது மற்றும் வலது பிரதானக் கால்வாய்கள் அமைந்துள்ள பிரதானக் கால்வாய்களில் பழுதடைந்த கட்டுமானங்களை புனரமைக்கும் பணிக்கு ரூ.9 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் ஓசூர் தொகுதி விவசாயிகளின் சார்பாக, எனது நெஞ்சார்ந்த



நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**போக்குவரத்து நெரிசல்!**

அதேபோல், எனது ஓசூர் சட்டமன்றத் தொகுதியில், தொழிற்சாலைகள் நிறைந்த ஓசூர் மாநகரில் ஏற்படும் கனரக வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதமாக ரூ.370 கோடி மதிப்பீட்டில் புறவழிச் சாலை மற்றும் ஓசூரில் புதிதாக ரூ.9 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா மாளிகை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் ஓசூர் தொகுதியின் மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று 4 ஆண்டு காலத்தில் 4 ஆண்டுகளில் எல்லோருக்கும் எல்லாம் என்ற பல்வேறு திட்டங்களைத் தீட்டி இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதில் சிலவற்றைக் குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொரோனா நிவாரண நிதியாக ரூ.4,000, ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு, பெட்ரோல் விலை ரூ.3 குறைப்பு, வேளாண்மைக்கு தனி பட்ஜெட், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட மனுக்களுக்கு தீர்வு, மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி, இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும்-48, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2,756 கோடி கடன் தள்ளுபடி, தலைவர் கலைஞரின் வருமுன் காப்போம்,

**நகைக் கடன் தள்ளுபடி;** மகளிருக்கு நகரப் பேருந்தில் இலவச பேருந்துப் பயணம்; முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்; கலைஞர் மகளிர் உரிமைத் தொகை; நான் முதல்வன் திட்டம்; தமிழ்ப் புதல்வன் திட்டம்; விவசாயிகளுக்கு 2 இலட்சம் மின்னிணைப்பு இலவசம்; ஆயிரம் முதல்வர் மருந்தகம் அமைத்தல் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்த முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்லாமல், இந்திய அளவில் தலைவர்களும், உலக அளவில் இருக்கக்கூடிய தமிழர்களும் பாராட்டக்கூடிய வகையில் அவற்றை சிறப்பாகச் செயல்படுத்திக் காட்டியுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற இந்த நான்கு ஆண்டு காலங்களில் ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்கு வழங்கிய முத்தான திட்டங்கள்: ஓசூர் அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரமுயர்த்தி, சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக 428 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக் கட்டடம்; 51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக ஓசூர் புறநகர் பேருந்து நிலையம்; 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாகலூரில் புதிய பேருந்து நிலையம்; 3.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரில் பட்டுப்பூச்சி குளிர்பதனக் கிடங்கு; 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரில் பன்முக கால்நடை மருத்துவமனை; 8.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 38 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 2 ஆய்வகக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக 361.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூர்-தளி சாலை, டி.வி.எஸ்-கெலமங்கலம் சாலை, ஓசூர்-இராயக்கோட்டை சாலை மற்றும் இ.எஸ்.ஐ. மருத்துவமனை-சிஷ்யா பள்ளி வரை இருவழிச் சாலைகள் நான்குவழிச் சாலைகளாக மாற்றப் பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறை மூலமாக சுமார் 52.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைப் பணிகள், பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள், சத்துணவுக் கூடங்கள், சுகாதார மையக் கட்டடங்கள், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் உள்ளிட்டவை கட்டப்பட்டிருக்கின்றன. 18 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓசூர் பேருந்து நிலையம் அருகில் வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது.

**வளர்ச்சிப் பணிகளை வாரி வழங்கிய முதல்வர்!**

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரிலுள்ள பழைய எம்.ஜி.ஆர். மார்க்கெட் கட்டடம் இடிக்கப்பட்டு, புதிதாக கட்டடம் மற்றும் மீன் மார்க்கெட் கட்டப்பட்டுள்ளன; 3.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கெலவரப்பள்ளி பூங்கா புனரமைத்தல் பணி எடுக்கப்பட்டுள்ளது; 583.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரில் பாதாள சாக்கடைத் திட்டம்; 144 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கெலவரப்பள்ளி அணையிலிருந்து சிப்காட் தொழிற்சாலைகளுக்கு 20 எம்.எல்.டி. தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம்; 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சேவகானப்பள்ளி ஊராட்சி, சொக்கரசனப்பள்ளி கிராமத்தில் உயர் மேம்பாலம்; ஓசூரில் சுமார் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் பன்னாட்டு விமான நிலையம்; பாகலூரில் புதிதாக பத்திரப்பதிவு அலுவலகம்; 49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாகலூரில் புறவழி ச்சாலை; சுமார் 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் GRT-சமத்துவபுரம் வரை நான்கு வழிச் சாலை; என இந்த நான்கு ஆண்டுகளில் ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்கு மட்டும் சுமார் 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகளை வாரி வழங்கிய திராவிட நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஓய்வு பெறும் வயது 60 ஆக உள்ளது. ஆனால், தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஓய்வு பெறும் வயது 58 ஆக உள்ளது. ஆகவே, அரசுத் துறைகளில் உள்ளதுபோன்று தனியார் நிறுவனங்களில் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்தித் தரும்படி இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மைக்ரோ இண்டஸ்ட்ரீஸ்!**

யாராலும், எந்த அரசாலும், எத்தனை ஆண்டுகளானாலும் மறக்கவே முடியாதபடி தொழிலாளர்களுக்கான சட்டங்களை இயற்றியது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். அதேபோல, ஆண்டாண்டு காலமாக மைக்ரோ இண்டஸ்ட்ரீஸ் தொழில்முனைவோர் கோரி வருவது தொழில் முனைவோர் நல வாரியம் ஆகும். சாதனைகளுக்கு மேல் சாதனை புரிந்துவரும் திராவிட மாடல் நாயகர் அவர்களை மைக்ரோ இண்டஸ்ட்ரீஸ் தொழில்முனைவோர் நல வாரியம் அமைத்துத் தருமாறு இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் தொழில் நகரங்களில் ஓசூர் பெரும் பங்கு வகிக்கிறது.

அதிக தொழிற்சாலைகள் நிரம்பிய ஓசூரில் தொழிலாளர்கள் தங்கள் வருங்கால வைப்பு நிதி சம்பந்தமாக அதிகாரிகளை தொடர்பு கொள்ள வேண்டுமெனில் சுமார் 150 கி.மீ. தொலைவில் உள்ள சேலத்திற்குச் சென்று அணுக வேண்டிய சூழ்நிலை உள்ளது. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் நலன் கருதி ஓசூரில் வைப்புநிதி அலுவலகம் (PF office) அமைத்தால் தொழிலாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓசூர் - தளி சாலை அதிகமாக வாகனங்கள் செல்லும் சாலை. இந்தச் சாலை வழியாக கனரக வாகனங்கள் Haritha, AVETEC, Caterpillar, TVS, Ather போன்ற பெரிய தொழிற்சாலைகளும், இன்னும் பல சிறிய தொழிற்சாலைகள் உள்ளன. இந்த ஒசூர் தளி சாலையில் இரயில்வே கேட் உள்ளது. இந்த இரயில்வே கேட் வழியாக பெங்களூரிலிருந்து ஒசூர் வழியாக பல்வேறு பகுதிகளுக்கு இரயில்கள் செல்கின்றன. அதேபோல், ஓசூரிலிருந்து பெங்களூருக்கு பல இரயில்கள் செல்கின்றன. தினமும் சுமார் 30-க்கும் மேற்பட்ட இரயில்கள் செல்லக்கூடிய காரணத்தினால், அதிகப்படியான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, உடனடியாக அந்த இரயில்வே கேட் பகுதியில் உயர்மட்ட மேம்பாலம் அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மேலாக இரயில்வே மேம்பாலம் ஒட்டி ஓசூர் உள்வட்ட சாலையிருக்கக்கூடிய காரணத்தினால், உள்வட்ட சாலையையும், இந்த தளி மேம்பாலத்தையும் இணைத்து மேலே ஒரு Rountana-ஐ அமைத்து மேம்பாலத்தை கட்டினால் நன்றாக இருக்கும்.

**மினி ஸ்டேடியம்**

ஓசூரில் அரசு பொறியியல் கல்லூரி. ஓசூர் வளர்ந்து வரும் மிகப் பெரிய நகரமாகும். ஓசூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பயிலும் மாணவர்கள் தனியார் பொறியியல் கல்லூரிகளில் அதிக பணம் செலுத்தி கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.

எனவே, ஒசூர், தளி, வேப்பனப்பள்ளி பகுதிகளை சேர்ந்த ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறும் வகையில், ஒசூரில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரி அமைத்து தந்தால், இப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு நன்றாக இருக்கும் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒசூரில் அந்திவாடியில் மினி விளையாட்டு அரங்கம் உள்ளது. இந்த உள்விளையாட்டு அரங்கத்தில் கேலரி, அலுவலக அறைகள் மற்றும் அடிப்படை வசதிகள் தேவையிருக்கக்கூடிய காரணத்தால், துணை முதலமைச்சர் அவர்கள் இந்த மினி ஸ்டேடியத்தை தரமுயர்த்தி தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீதமிருக்கக்கூடிய என்னுடைய சட்டமன்றத்தினுடைய கோரிக்கைகள் இந்த மாமன்றத்தில் பேசியதாகக் கருதி, பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அவற்றை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இந்தளவிற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி, தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்: (மேசையைத் தட்டும் ஒலி) 2026-ல் மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏழாவது முறையாக நம்முடைய தளபதி முதலமைச்சர் அவர்கள் மீண்டும் இரண்டாவது முறையாக முதலமைச்சராக ஆவார் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, நிறைவு செய்கிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

ஓசூர் தொகுதி, ஓசூர் மாநகராட்சிக்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைத்து தர வேண்டும்.

ஓசூர் மாநகராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைத்து தர வேண்டும்.

ஓசூர் மாநகராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்களுக்கு பகுதிநேர பணி என்பதை மாற்றி, முழுநேர பணியாளர்களாக மாற்றம் செய்து, அவர்களின் ஊதியத்தை உயர்த்தி, பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

ஓசூர் மாநகராட்சி, ஆலப்பள்ளி அருகே தோட்டகிரி பகுதியில் கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருந்தகம் அமைத்துத் தர வேண்டும். பாகலூரில் உள்ள கால்நடை மருந்தகத்தை தரம் உயர்த்தி கால்நடை மருத்துவமனையாக மாற்றி தர வேண்டும்.

ஓசூரில் மெட்ரோ இரயில் சேவையை வழங்க வேண்டும்.

ஓசூரில் ஊடகம் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு புதிதாக கட்டடம் கட்டித் தர வேண்டும்.

ஓசூரில் புதிய விதை உதவி அலுவலர் பணி நியமனம் பணியிடம் உருவாக்க வேண்டும். தளி வட்டாரத்தில் புதிதாக ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் அமைத்து தர வேண்டும்.

ஓசூர் தொகுதி, பாகலூர் முதல் பேரிகை வரை இருவழி சாலையை நான்கு வழி சாலையாக அகலப்படுத்த வேண்டும்.

ஓசூர் தொகுதி, மத்திகிரி கூட்டுரோட்டில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டும். மேலும் அந்திவாடி சோதனை சாவடியில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்க ஓசூர் மாநகரம் பாகலூர் சாலை, GRT முதல் நல்லூர் சோதனை சாவடி வரை மேம்பாலம் அமைத்து போக்குவரத்து சீர் செய்ய வேண்டும்.

சூளகிரி வட்டம் பேரிகையில் வெளிவட்ட சாலை அமைக்க வேண்டும்.

ஓசூர் - பேரிகை சாலை முத்தாலி வழியாக இருவழி சாலையை நான்கு வழி சாலையாக அகலப்படுத்த வேண்டும்.

பாகலூரில் வெளிவட்ட சாலை அமைக்க வேண்டும்.

இவ்வாறு ஒய் பிரகாஷ் பேசினார்.




திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி, மூலனூர் கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிய தார்ச் சாலை அமைக்கும் பணியினை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் துவக்கி வைத்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் ப.பழனிச்சாமி, துரை தமிழரசு, பேரூர் கழக செயலாளர் மக்கள் க.தெண்டபாணி, மாவட்டப் பிரதிநிதி இல.மோகன்ராஜ் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சா. கணேசன்

**ஏப்ரல் 13 (2018)**



**தனது இளமை காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்து கொண்ட இவர், பி அன்ட் சி மில் அங்காடி விற்பனையாளராக இருந்தபோதே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் பழகியவர்.**

**1959, 64, 68 ஆகிய மூன்று முறை தொடர்ந்து மாமன்ற உறுப்பினராகவும் – 1970–ல் சென்னை மாநகர மேயராகவும் – தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**சென்னை மாநகர மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் தனி முத்திரை பதித்தவர், இவர், கவுன்சிலர் என்ற முறையில் மாநகர பேருந்துகளில் பயணித்து மக்களின் குறைகளை நேரடியாக அறிந்ததோடு, மேயராக இருந்த போது மும்பை மேயர்கள் மாநாட்டில் பங்கேற்று வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி, தமிழகத்திற்கும் கழகத்திற்கும் பெருமை சேர்த்தவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.**

**"தன்னலம் பார்க்காமல் கட்சிக்காக உழைத்த, சுயநலம் பார்க்காமல் பொதுநலம் ஒன்றை மனதில் வைத்து, இந்த மாநகர மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்காக பாடுபட்ட ஒரு தொண்டரின் படத்தை; தொண்டர் என்பதை விட மக்களின் ஊழியரின் படத்தை அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்கள் ஊழியரின் படத்தை இங்கே திறந்து வைத்திருக்கிறேன்." என கழகத் தலைவர் அவர்கள் இவரது படத்திறப்பு விழா உரையில் குறிப்பிட்டுள்ளார்.**


**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.எஸ். தென்னரசு

**ஏப்ரல் 13 (1991)**



**தென்மாவட்டங்களில் கழகம் வலிவுடன் வளர பெரிதும் காரணமானவரும், மூத்த தளபதிகளில் ஒருவராகவும் இருந்து கழகத்தை வழிநடத்திச் சென்ற ஆற்றலாளர்.**

**அண்ணாவால் அரவணைக்கப்பட்டு அரசியலில் நுழைந்து கலைஞரின் இதயத்தில் தனி இடம் பெற்றவர்.**

**சிறுகதை மன்னன், சின்னமருது என்றெல்லாம் அழைக்கப்பட்டவர்.**

**1949ல் கிளைச் செயலாளராக பொறுப்பேற்று, வட்டச் செயலாளராக வளர்ந்து, மாவட்டச் செயலாளராக உயர்ந்து, படிப்படியாக கழக அமைப்புகளின் நுணுக்கங்களை அனுபவ பூர்வமாக அறிந்த காரணத்தால், அமைப்புச் செயலாளர் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டவர்.**

**ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கு, மாவட்டச் செயலாளராக 15 ஆண்டுகள் பணியாற்றிய பெருமை இவருக்கு உண்டு.**

**தி.மு.கழகத்தின் சிறைப் பறவையாக வாழ்ந்து காட்டியவர். 26 முறை கழகத்திற்காக சிறை சென்றவர். மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறைவாசம் இருந்தவர். அதேபோன்று 1965ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை பெற்றவர்.**

**தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக 1989ஆம் ஆண்டு திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1990ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்கள்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**